
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | பிப்ரவரி 1992 | இதழ் 2



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள் 1—12
2. ஆத்தும ஆதாயம் உங்கள் பிரதான நோக்கமாயிருக்கட்டும் 13—16
3. கிறிஸ்தவப் பிள்ளை வளர்ப்பு 17—19
4. நவீன போதகர் 20—23
5. கிறிஸ்து சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன? 24—28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 5. February—1992 Issue 2

**ஆசிரியவுரை**

## மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள்

தேவன் மனிதக்குலத்துக்கு மார்க்க ரீதியாக மூன்று சகாப்தங்கள் கொடுத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. அவைகள் 1) கோத்திரப் பிதாக்கள் அல்லது மூதாதையர் சகாப்தம் 2) யூதர்களின் சகாப்தம் 3) கிறிஸ்தவர்கள் சகாப்தம் என்பதாகும்.

மூதாதையர் சகாப்தம் என்பது ஏதேன் தோட்டத்தில் துவங்கி மனிதக்குலத்தைக் குறிப்பிட்ட காலம் வரையில் தனித் தனிக் குடும்பமாக 2500 ஆண்டுகள் ஆட்சி செய்தது. அதற்குப் பிறகு மோசேயின் நியாயப்பிரமாணம் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டுஅதுஇஸ்ரவேல் மக்களை ஒரு தேசமாக சுமார் 1500ஆண்டுகள் ஆட்சி செய்தது. அதுவும் ஒரு குறிப்பிட்ட காலம் தான். அதன் பின் மூதாதையர் ஆட்சி முறையும், யூதரின் நியாயப் பிரமாண ஆட்சி முறையும், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் எடுபட்டுப் போன பிறகு தேவன் எல்லா நாட்டவரையும் எல்லா இனத்தவரையும் தழுவிக் கொள்ளத்தக்க வகையில் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கொடுத்தார். அதற்குப் பிறகு யூதனென்றும் யூதனல்லாதவன் என்றும் பாகுபாடு இல்லாமல் கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குள் ஒப்புரவாக்கப்பட்டார்கள். இதில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவெனில், ஒரு சகாப்தத்தில் அமுலில் இருந்த ஒரு பிரமாணம் அடுத்த சகாப்தத்திற்கு செல்லுபடியாகாது. இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் கிறிஸ்தவத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிற பல பிரச்னைகள் தீர்ந்து விடும்.

உதாரணமாக, சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தியாவைப் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டு கொண்டிருந்தார்கள். இப்பொழுது இந்தியா சுதந்தரமடைந்து தனக்கென ஒரு அரசியல் சாசனத்தை ஏற்படுத்திக் கொண்டது. இப்பொழுது இந்தியாவில் ஒருவன் எந்த சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்? நிச்சயமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தான் என்பதை நாம் எல்லாரும் ஒத்துக் கொள்வோம். அதேபோலத்தான் முற்பிதாக்கள் காலத்தில் அமுலில் இருந்த ஆட்சிமுறை, தேசியஆட்சிமுறை அமுலில் இருந்த யூத சகாப்த்தத்திற்க்குப் பொருந்தாது. அதே போல யூத சகாப்தத்தில் உள்ள சட்ட திட்டங்கள் கிறிஸ்தவ சகாப்தத்துக்குப் பொருந்தாது.

இப்படிச் சொல்லும் போது நாம் எந்தச் சட்டத்தையும் குறை கூறுகிறோம் என்று தப்பாக எண்ணிவிடக்கூடாது. மாறாக சட்டத்தின் சிறப்பு நிலைகளை உய்த்து உணர்ந்து அதது என்ன நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது என்று தெளிவாகப் புரிந்து கொண்டு இருக்கிறோம். இதைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதும் போது ''தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும், நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது'' என்கிறார். ரோமர் 15:4.

அவைகளை நாம் அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல, நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது என்று கொரிந்து சபையாருக்கு எழுதும் போதும் சொல்கிறார். (1, கொரி 10:11) அதை நாம் புரிந்து கொண்டு செயல் பட்டால் குழப்பத்திற்கு இடமில்லை.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல் மூதாதையர் யுகம் ஆதிமக்களாகிய ஆதாம் ஏவாளிலிருந்து ஆரம்பிக்கிறது. இதைக் குடும்ப ஆட்சிமுறை என்று சொல்லலாம். அதாவது குடும்பத் தலைவனே ஆசாரியனாகவும் செயல்பட்டான். இந்தத் தலைவர்களுக்கு கோத்திரப் பிதாக்கள் என்றும் இந்த ஆட்சி முறைக்கு 'தந்தைவழி ஆட்சி' என்ற பெயரும் பொருந்தும் (அப் 7:8,9) ஆதாம் மனித குலத்தின் முதல் நபராக இருந்தபடியால் அவர் அந்தக் குடும்ப ஆட்சி முறைக்கு தலைவராகக் கருதப்பட்டார். 1 கொரி 15:22,45) இந்த ஆட்சி முறை சீனாய் மலையில் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட காலம் வரை நீடித்திருந்தது .பின்பு யூதருடைய சகாப்தம். இது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரையில் நிலைத்திருந்தது. இந்த சகாப்த்தத்துக்குரிய நியாயப் பிரமாணம் பாலைவனப் பயணத்தின் போது சீனாய் மலையில் மோசேயின்

மூலமாகக் கொடுக்கப்பட்டது. அது முதல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்துக்குள் பிரவேசிக்கிற வரை ஏற்பட்ட பல விதமான சூழ்நிலைகளில் அஞ்சாமலும் ஞானமாகவும் தீரமாகவும் இஸ்ரவேல் மக்களை நடத்தி வந்தவர் மோசே. ஆகையால் அவரே அந்த சகாப்தத்தின் தலைவர். **''நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது''** என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். (யோவான் 1:17) சீனாய் மலையில் கர்த்தருடைய பிரமாணம் மோசேயிடம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சியைச் சுருக்கிக் கீழ்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. **''இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட பின்பு யோர்தானுக்கு இப்புறத்தில் எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுடைய தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே, அவர்களுக்கு மோசே சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும், நியாயங்களும் இவைகளே''**. (உபா 4:45)

''பிரிவினைச்சுவர்'' என்று வர்ணிக்கப்படும் நியாயப் பிரமாணம் சிலுவையில் ஆணி அடித்து நிறைவேற்றப்பட்ட பிறகு, கடைசி யுகமாகிய "கிறிஸ்துவின் சகாப்தம்'' அமுலுக்கு வந்தது. இது குடும்ப ஆட்சி முறை போன்றதோ அல்லது தேசீய ஆட்சி முறை போன்றதோ அன்று. இது உலகமெங்கும் உள்ள அனைத்து மாந்தரையும் உள்ளடக்கியது. பரிசுத்த வேதாகமத்தில் இக்கால கட்டத்தைக் ''கடைசி காலம்'' என்று பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் பொருள் ''உலகம் உள்ளளவும்'' என்பதாகும். இந்த யுகம் உலகத்தில் உள்ள அனைத்து மாந்தரையும் கட்டுப்படுத்தும் என்றாலும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்பவரை குறிப்பாகக் கட்டுப்படுத்தும். யூத சாகாப்தத்தின் போது ''இஸ்ரவேலர்'' என்ற பெயர் உயர்த்திக் காட்டப்பட்டது. ஆனாலும் அந்நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் ஒரு புதிய பெயர் கொடுக்கப்படும் என்று தீர்க்கத்தரிசனம் உரைத்து வந்தார்கள். (ஏசாயா 56;5, 62:2 65:15) அந்த தீர்க்கத் தரிசனங்கள் நிறைவேறின என்பதை அப் 11:26ல் நாம் வாசிக்கிறோம். **''அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள்''** என்ற **பெயர் வழங்கலாயிற்று.''**

அதற்குச் சில காலம் சென்று **''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதனிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக் கடவன்''** என்கிறார் பேதுரு (1பேது 4:16) இந்த புதிய சகாப்தத்திற்கு கிறிஸ்துவே தலைவர். அதை எபேசியருக்கு எழுதின நிருபத்தில் பவுல்

மேலும் தெளிவாக்குகிறார். **எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிற வருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்** *எபே 1:22,23)* வேறு ஒரு இடத்தில் இதை இன்னும் வலியுறுத்தி. **''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்** என்கிறார் *(கொலோ 1:18)* இதன் மூலம் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு கிறிஸ்துவே தலைவர் என்பதும் அவர் அருளிய பிரமாணங்களே இந்தச் சகாப்தத்தில் வாழ்கிற மக்களைக் கட்டுப்படுத்தும் என்பதும் தெளிவாகிறதல்லவா? **(யோவான் 1:17)**

## இம்மூன்று சகாப்தங்களிலும் பலி செலுத்தலில் உள்ள ஒற்றுமையும் வேற்றுமையும்

மேற்சொன்ன மூன்று சகாப்தங்களிலுமே பலி செலுத்துதல் ஒரு இன்றியமையாத அம்சமாக இருந்திருக்கிறது. குறிப்பாக இரத்தம் சிந்துதல் இல்லாமல் பலி செலுத்தப்படவில்லை. முதல் மனிதனாகிய ஆதாமின் முதல் மக்கள் இரண்டு பேரும் பலி செலுத்தினார்கள். ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளில், கொழுமை யானவைகளில் சிலவற்றைக் கொண்டுவந்து பலியிட்டான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனாக இருந்தபடியால் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தான். கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கைகளையும் நிராகரித்தார், காயீன் விவசாயியாக இருந்தபடியால் தன்னிடத்தில் உள்ளதை பலியாகக் கொண்டு வந்தது நியாயம் தானே என்று எண்ணத் தோன்றுகிறதல்லாவா? ஆனால் அதற்கான காரணத்தை எபிரேய நிருப ஆசிரியர் சொல்லும் போது **''விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்''** என்கிறார். *(எபி 11:4)* மிருக இரத்தத்தை மேன்மையான பலி என்றும், கர்த்தர் அதை அங்கீகரித்தார் என்றும் சொல்லப்பட்டிருப்பதினால் மூதாதையர் சகாப்தத்தில் மிருக இரத்த பலி செலுத்தும்படி தேவன் அவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த வழக்கம் யூதருடைய சகாப்தத்திலும் நடைமுறையில் இருந்தது. **''இரண்டாம் கூடாரத்திலே பிரதான ஆசாரி**

யின் வருடத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து அந்த இரத்தத்தைத் தனக்காகவும், ஜனங்களுடையதப்பி தங்களுக்காகவும் செலுத்துவான்' (எபி9:7) மேலும் 22ம்வசனத்தில்''இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' என்று சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து தேவன் இந்த சகாப்தத்திலும் மிருக பலியை அங்கீகரித்தார் என்பதை அறியலாம்.

இருந்த போதிலும் அந்த மிருக இரத்தம் பாவ நிவர்த்தி செய்ய முடியவில்லை. ''அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே'' என்கிற வசனம் அதை உறுதிப்படுத்துகிறது. (எபி 10:4) ஆனால் அந்த பலிகள் பாவங்கள் உண்டென்றும் அதை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம் என்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்க பயன்பட்டது. (எபி 10:3)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மிருகங்களின் இரத்தத்தைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்தது என்பதை இயேசுவே கூறியிருக்கிறார். "இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது''. என்கிறார் (மத் 26:28) ஏனெனில் மிருகங்களின் இரத்தம் தரமுடியாத பாவ மன்னிப்பை இது அருளுகிறது. இதைக் குறித்து பவுல் ''அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாகியிருக்கிறது.'' என்கிறார். (எபே 1:7) யோவான் கூட ''அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (யோவான் 1:7) என்கிறார். இதன் மூலம் இதற்கு முந்திச் செலுத்தப்பட்ட மிருக இரத்த பலிகள் இதற்கு நிழலாகவே இருந்தது என்றும் இயேசுவின் மாசற்ற இரத்தமே பாவங்களைப் போக்க முடியும் என்பதும் உறுதியாகிறது.

சபை சம்பந்தமாகவும் நிழலும் நிஜமும் நமக்குத் தரப்பட்டுள்ளன.

சென்ற இரண்டு யுகங்களிலும் கர்த்தருடைய சபை நமக்கு நிழலாக வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு நோவாவின் பேழை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. மனிதக்குலம் அனைத்தும் பெருவெள்ளத்தால் அழிக்கப்பட்டபோது நோவாவின் குடும்பத்துக்கு ஒரு அடைக்கலம் கொடுத்தார். அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் இரட்சிக்கும் எண்ணத்தோடு ஒரு பேழையை உண்டு பண்ணச் சொன்னார். ''ஆனாலும் உன்னோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் உன் மனைவியும் உன் குமாரர்களின் மனைவியும் பேழைக்குள் பிரவேசியுங்கள்''. (ஆதி6:18)

நோவா கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து முடித்தபடியால் (ஆதி 6 : 23) நோவா அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது மட்டுமல்லாமல் விசுவாச வீரர்கள் வீராங்கனைகள் பட்டியலில் இடமும் பெற்றான் **''விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்பைப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்.''** (எபி 11:7) இந்தப் பேழை சபைக்கு நிழலாக இருக்கிறது. இது பாதுகாப்பும் அடைக்கலமுமான இடம்.

அடுத்து, பிற்காலத்தில் ஆலயமாக உருவெடுத்த ஆசரிப்புக் கூடாரம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சபையின் நிழலாக ஆராதனை செய்யும் இடமாக இருந்தது. இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்தில் உள்ளவைகளின் சாயலின் நிழலுக்கு ஒத்திருந்தது. மோசே நிழலாகிய கூடாரத்தை உண்டு பண்ணுகையில் **'மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ** எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று சொல்கிறார். (எபி 8:5) கூடாரத்தின் அமைப்பு முறைகளையும் அதற்குள் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் அர்த்தத்தையும் காரணங்களையும் எபி 9:1–6 வசனங்களில் காணலாம். அவைகள் சபை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நிழலாக இருக்கிறது. நிழலாகிய ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்படும் போது தேவனுடைய கட்டளைப்படியே அனைத்தையும் செய்ய கவனமாயிருந்தனர். நிழல் விஷயத்தில் எவ்வாறு அனைத்தையும் தேவனுடைய கட்டளைபடியே செய்தார்களோ அதே போன்று தேவனுடைய அனாதித் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள நிஜமாகிய சபை விஷயத்திலும் கூட அனைத்தையும் தேவனுடைய ஆலோசனையின்படி செய்வது மிகவும் அவசியம் அன்றோ!

பாருங்கள், இயேசு கிறிஸ்து **''இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்''** என்றார். (மத் 16:18) இங்கே சபை ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவர் அந்த ஒரே சபையைத் தான் எல்லாக் காலத்துக்கும் ஏற்றதாக அங்கீகரித்திருக்கிறார். அந்த ஒரே சபையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று மூப்பர்கள் எச்சரிக்கப் படுகிறார்கள். **''ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்''** (அப் 20:28) இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்ட அந்த சபை அசுத்த-

மடையாதபடி அதன் பரிசுத்தம் காக்கப்பட வேண்டும். அது நிழல்களாகிய நோவாவுடைய பேழையை விட, மோசே காலத்தில் கட்டப்பட்ட ஆசாரிப்புக் கூடாரத்தை விட, மிகவும் உயர்ந்தது, சிறந்தது. ''கிறிஸ்து சபையிலே அன்பு கூர்ந்து தம்மைத் தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார்'' (எபே 5:25,26) இயேசு கிறிஸ்து தன் ஜீவனைக் கொடுத்து சபையைக் கிரயத்துக்குக் கொண்டார் என்றால் அதன் சிறப்பை அவருடைய தொண்டர்களாகிய நாம் உணர்ந்து தொடர்ந்து போராடி அதன் பரிசுத்தத்தைக் காக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா? பிசாசு உட்புகுந்து தேவனுடைய திட்டத்தைப் பாழ்படுத்தி இன்றைக்கு பல போலி சபைகளை உருவாக்கி மக்களைக் குழப்புகிறானே. மத் 15:13 வாசித்துச்சிந்திப்பீர்!

## மார்க்க ரீதியான ஒற்றுமை வேற்றுமை

அந்தந்த யுகங்களின் மார்க்க ரீதியான ஒழுங்கு முறைகளையும் கூட ஆய்ந்து பார்க்க வேண்டும். ஏற்கனவே நாம் சொல்லிய பிரகாரம், முதலாவது குடும்ப ஆட்சி முறை-அதாவது ஒவ்வொரு முடும்பமும் தனக்கும் தேவனுக்கும் உள்ள உறவை எவ்வாறு வைத்துக் கொள்வது என்பதை ஒவ்வொரு குடும்பத் தலைவனும் நிர்ணயித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஆபிரகாமினுடைய குடும்பத்துக்குத் தான் **''உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன். பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்''** என்று வாக்குக் கொடுத்தார் (ஆதி 12: 3) பின்னர் வேறு ஒரு இடத்தில் **''கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறை வேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின் வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவேன் என்பதை அறிந்திருக்கிறேன்''** என்கிறார். (ஆதி 18:19) மேற் சொன்ன காரியங்கள் ஆபிரகாமின் குடும்பத்துக்கு மட்டுமே பொருந்தும். மற்ற எவரையும் கட்டுப்படுத்தவில்லை என்பதைக் கவனிக்கவும்.

பின்னர் யூத சகப்தத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களை ஒரு நாடாக ஏற்றுக் கொண்டு ஆட்சி செய்தார் என்று வேதம் கூறுகிறது. ''நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்ஜியமும், பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள்'' என்றார். இதை இன்னும் தெளிவுபடுத்தும் வகையில் ''உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும் உம்-

முடைய கண்களில் என்க்கு கிருபை கிடைப்பதற்கும் உம்முடைய வழியை எனக்கு அறிவியும். இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும்'' என்று மோசே ஜெபித்தார். (யாத் 33:13) இங்கே இஸ்ரவேல் மக்களை தேவனுடைய சொந்த ஜனம் என்று பிரத்தியேகப்படுத்திச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆனால் கிறிஸ்தவ சகாப்தத்தில் ஒரு குறிப்பிட்ட நாடு, இனம் என்ற பிரச்னைக்கே இடமில்லை. இயேசு கிறிஸ்து ''நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15)என்று தம்முடைய சீஷர்களுக்கு கட்டளை கொடுத்தார். இக்கட்டளையை நிறைவேற்றச் செயல்படும்பொழுது யூதர்கள் வைராக்கியங் கொண்டு சீஷர்களைக் துன்புறுத்தத் தொடங்கினார்கள். ஆனால் அதைக் கண்டு அவர்கள் மருண்டு போய் தங்கள் சுவிசேஷப் பணியைக் கைவிட்டு விடவில்லை. ''சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் ''(அப் 8:4) ஒரு காலத்தில் சுவிசேஷமும் இரட்சிப்பும் யூதர்களுக்கு மட்டுமே என்று எண்ணிக் கொண்டிருந்த பேதுரு புதிய சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டு ''தேவன் பட்சபாதமுள்ளவர்கள் அல்லவே எனினும் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். ''என்று தன் தெளிந்த சிந்தனையை வெளிப்படுத்துகிறார் (அப் 10:34,35) கிறிஸ்தவர்களுடைய பணி களம் உலகம் முழுவதும் என்பதைப் பவுலும் பறை சாற்றுகிறார். ''இப்படியிருக்க அவர்கள் கேள்விப் படவில்லையா? என்று கேட்கிறேன். கேள்விப்பட்டார்கள். அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச் சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறதே ''என்கிறார் (ரோமர் 10 18) மேலும், ''அந்த சுவிசேஷம் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது'' என்றும் கூறுகிறார் (கொலோ 1:23) இதன் மூலம் கிறிஸ்தவ சகாப்தம் ஒரு குடும்பத்தையோ, ஒரு நாட்டையோ, ஒரு இனத்தையோ தன் எல்லைக் கோடாக அடைத்துக் கொள்ளாமல் அனைத்து மக்களையும், அனைத்து நாடுகளையும் ஊடுருவிச் செல்லும் ஒரு மாபெரும் சக்தியாகத் திகழ்கிறது.

## மூன்று சகாப்தங்களிலும் சுவிசேஷம்

நாம் சாதாரணமாக நம்முடைய காலத்தில் சுவிசேஷம் எப்படி அறிவிக்கப்படுகிறது என்று தான் அறிந்திருக்கிறோம் இந்தக் கடைசி காலத்தில் தான் சுவிசேஷத்தின் இரகசியம் பரிபூரணமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மெய்தான் என்றாலும் (1 கொரி 2:8,12; 1 பேது 1:10-12) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளில் சுவிசேஷப்

பிரகடனம் செய்யப்பட்டதற்கு வெகு காலத்துக்கு முன்பே வாக்குத்தத்தமாகவும் ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் சுவிசேஷம் அந்தந்த காலத்துக்கேற்ப அறிவிக்கப்பட்டுக் கொண்டு தான் இருந்தது, **''மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது''** என்று பவுல் கூறுகிறார். (கலா 3:8) இந்தக் காரியத்தை இன்னும் தெளிவாக வேறொரு இடத்தில் ''ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் வாக்குத் தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே'' (கலா 3:16) சொல்லப் போனால் ஆபிரகாம் நாடோடியாக இருந்த பொழுதே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்று தெரிகிறது.

யூத சகாப்தத்தின் போது, தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகையைக் குறித்து அடிக்கடி தீர்க்கதரிசனம் உரைத்துள்ளனர். (ஏசாயா 53:1-12; சகரியா 13:1; மல் 4:2) அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைப் பிரசங்கித்த பொழுது நியாயப் பிரமாணத்தையும், தீர்க்கதரிசிகளையும் மேற்கோள் காட்டுகிறார் (அப்24:14) பேதுருவும் கூட அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்கிறார் (அப் 10:43).

இருந்தபோதிலும் கடைசிக்காலத்திலே கிறிஸ்தவ சகாப்தத்தில் தான் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற பூரண சுவிசேஷம் தெளிவாகப் பிரசிங்கப்பட்டு வருகிறது. (அப் 2:14-40) சுருங்கச் சொன்னால் இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலே சுவிஷேமாகும் (1 கொரி 15:1-4) இதை இயேசுவின் மரணத்துக்குப் பிறகு மிகுந்த தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு போன்றவர்கள் தேவனுடைய குமாரனைக் கொலை செய்தவர்களிடம் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்து அவர்களைக் கர்த்தருக்குள் கொண்டு வந்தார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் பவுலோடு சேர்ந்து ''சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது ''(ரோமர் 1:16) என்று முழங்கினார்கள். ஆதிக் கிறிஸ்தவர்களின் தாரகமந்திரம் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதே.

## ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒய்வுநாளின் இடம்

மூதாதையர் சகாப்தத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஓய்வு நாளைப் பற்றியோ ஓய்வுநாள் அனுசரிப்புப் பற்றியோ எதுவும் தெரியாது. நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட பிறகு, மோசே பரிசுத்த வேதாகமத்தில் முதல் ஐந்து நூல்களாகிய நியாயப் பிரமாண புஸ்தகங்களை எழுதின போது அதாவது கி.மு. 1500 வாக்கில் தேவன் ஆறுநாள் சிருஷ்டிப்புப் பணிகளை முடித்துக் கொண்ட பிறகு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று எழுது-கிறார். அதாவது ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டதற்கு சுமார் 2500 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓய்வு-நாள் அனுசரிப்பது பற்றி தேவன் கொடுத்த விதியை இங்கே அவர் தெளிவுபடுத்து-கிறார் **''நீ எகிப்து தேசத்தில் அடிமையாய் இருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்-திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார்.** என்றும் நினைப் பாயாக, ஆகையால் ஓய்வுநாளை ஆசரித்த உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளை யிட்டார். (உபா 5:15) இந்த ஓய்வு நாள் ஆசரிப்புச் சட்டம், நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட பிறகு அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை-யாக்கப்பட்ட வர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

ஓய்வுநாள் ஆசரிப்பைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்-வதற்கு கீழ்க்காணும் வசனப்பகுதியைப் படியுங்கள். ''நீர் சீனாய் மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி அவர்-களுக்குச் செம்மையான நீதி நியாயங்களையும், நல்ல கட்டளை-களும், கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர்.''

''உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி உமது தாசனாகிய மோசேயைக் கொண்டு அவர்களுக்குக் கற்-பனைகளையும் கட்டளைகளையும் நியாயப் பிரமாணங்களையும் கற்பித்தீர்'' (நெகே 9:13,14) மேற்படி வசனங்கள் கூறுகிற உண்மை என்ன? ஓய்வுநாள் பிரமாணம் மோசேயின் மூலமாக சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது என்று தெளிவாகக் கூறு-கிறதல்லவா? அதற்கு முந்தி வாழ்ந்த மக்களுக்கு அதைப்பற்றி தெரியாது. இது இஸ்ரவேல் மக்களுக்கு மட்டும், வேறே இனத்த-வர்களுக்கு ஒரு போதும் கொடுக்கப்படவில்லை. ''ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும் ஓய்வு நாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி அதைக் கைக்கொள்ளக் கடவர்கள்''.

''அது என்றென்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திர-ருக்கும் அடையாளமாயிருக்கும். ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வா-

ன்த்தையும் பூமியையும் உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்'' என்று யாத் 31:16,17 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இந்த விசேஷ அடை யாளம் இஸ்ரவேலருக்கு மட்டுமே. மற்ற எவருக்கும் இது பொருந்தாது.

கிறிஸ்தவர்கள் ஒய்வுநாளை ஆசரிப்பதில்லை, ஆசரிக்க வேண்டியதும் இல்லை. ஆராதனை மற்றும் தொழுகைக்காக வாரத்தின் முதல் நாளிலே கூடி வருகிறார்கள். அது ஓய்வெடுத்துக் கொள்ளும் நாளல்ல. இந்த நாளில் கர்த்தருடைய பந்தியை நினைவு கூரும்படி கூடி வருகிறார்கள். (அப் 20:7) அவர்கள் அந்த நாளைக் கொடுப்பதற்க்கும் கர்த்தரைப் பாடித் துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் பயன்படுத்தினர்கள். (1கொரி 16:2) தங்களுடைய உழைப்பு முடிந்து நித்திய இளைப்பாறுதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ''ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருவதாயிருக்கிறது''. (எபி 4:9) ''இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்துக்கு வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது''. (கலா 3:24) இந்த வசனத்தின்படி யார் எல்லாம் மீண்டும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாகிய மிருகபலி, அங்கி அணிதல், மெழுகுவர்த்தி கொழுத்துதல், இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது, ஒய்வுநாள் ஆசரிப்பு, ஆகியவைகளைப் கைக்கொள்ள விரும்புகிறர்களோ, அவர்களைக் கிறிஸ்துவை விட்டு விலக்கி வைக்கும். ''நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்''. (கலா 5:4) என்று கூறுகிறதைக் கவனியுங்கள்.

## ஒவ்வொரு சகாப்தத்தின் முடிவு

மூதாதையர் யுகம் என்பது ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்து கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை நீடித்தது. எந்த ஒரு சகாப்தத்திலும் புதிஜாதியாரை தேவன் கைவிடவில்லை. உண்மையென்னவெனில், அவர்கள் தான் தேவனை விட்டு விலகிப்போய் விட்டார்கள் (ஏசாயா 59:1-2) அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில்தேவனற்றவர்களுமாயிருந்தீர்கள்'' (எபே 2:11:15) பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டு இருதிறத்தாரும் ஒன்றாகும் வரை அப்படியிருந்தார்கள்: பிறகு அவரே "நம்முடைய சமாதான காரணராகி இரு திறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைக்

தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படி சமாதானம் பண்ணினார் (எபே 2:14,15) நியாயப்பிரமாணம் அகற்றப்பட்டதால் அதிக நன்மைகள் ஏற்பட்டன. முந்தின கட்டளை பலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது.

நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது. அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். (எபி 7-18,19) தேவனே உம்முடைய சித்தத்தின் படி செய்ய, இதோ வருகிறேன். என்று சொன்னார், இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்.

இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கி கிறோம்'' என்று எபிரேய நிருப ஆசிரியர் கூறுகிறார். (எபி 10:9,10) இப்படியாக நியாயப்பிரமாணமானது சிலுவையில் ஆணி யடிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (கொலோ 2:14)

அந்தப் பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டபிறகு அனைத்து மாந்தருக்கும் — அதாவது கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிற யூதருக்கும், யூதரல்லாதவருக்கும் கிறிஸ்துவே மத்தியஸ்தராயிருக்கிறார். இதைத் தான் ''ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

ஏனென்றால் எங்கே மரணசாசனமுண்டோ அங்கே அந்த சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்.

எப்படியெனில் மரணமுண்டான பின்பே மரண சாசனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்கு பெலன் இல்லையே என்று தெளிவு படுத்துகிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9:15-17) இந்த வசனங்கன் கோடிட்டுக் காட்டுகிற கருத்து என்னவெனில்; கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குப் பிறகு கிறிஸ்துவின் பிரமாணம் அமலுக்கு வந்ததையும், அது கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே பண்டிகை நாளில் அதிகாரப் பூர்வமாக பிரகடனப் பட்டதையுமே. அன்று மலர்ந்த கிறிஸ்துவ சகாப்தம் இந்த யுகத்தின் முடிவுபரியந்தம் நிலைநிற்கும்

நண்பர்களே, மேற்சொல்லப்பட்டுள்ள அனைத்துக் காரியங்களையும் கவனமாய்ப் படித்து உங்கள் வேதாகமத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து குழப்பம் நீங்கித் தெளிவடையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**தில்லார்டு தாமன்** **E. Z. செல்வநாயகம்**

# ஆத்தும ஆதாயம்

# உங்கள் பிரதான நோக்கமாயிருக்கட்டும்

கர்த்தருடைய பிள்ளைகள் என்ற சிறப்பு நிலையை அடைந்துள்ள கிறிஸ்தவர்கள், தாங்கள் எவ்விதமாக வளர்ந்து கொண்டு வருகிறோம், என்பதை அடிக்கடி சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நம்முடைய நோக்கங்களையும், செயல் திட்டங்களையும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும், அதைச் சீர்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் பற்றி அவ்வப்போது சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரபலமடைந்துள்ள பல்வேறு கம்பெனிகளை உற்றுக் கவனித்தால் அவர்கள் அவ்விதமாய்ச் செய்து தங்கள் வியாபாரத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் என்ற உண்மை தெரியவரும்.

நாம் அப்படிச் சிந்திக்கவும், செயல்படவும் மறுத்தால், நான் கிறிஸ்தவன், என்னுடைய வாழ்க்கையில் முடிகிற அளவு உண்மையாயிருக்கிறேன், பொய் சொல்லுவதில்லை; பிறரை ஏமாற்றுவதில்லை சண்டை சச்சரவுக்குப் போவதில்லை, ஒழுங்காக ஆராதனைக்குச் செல்லுகிறேன் என்று ஒரு வேளை திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் ஒரு உண்மைக் கிறிஸ்தவனுடைய கடமை இத்தோடு முடிந்து விடுவதில்லை, நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வளரவேண்டும். நம்முடைய நம்பிக்கையைக் குறித்து மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய நண்பர்கள் நமது நற்பண்புகளால் ஈர்க்கப்பட வேண்டும். நாம் கனிகொடுக்கிற கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் ஒரு திட்டம் இருக்க வேண்டும். ஓர் ஆண்டுக்குள் இப்படிச் செய்வேன். ஐந்து ஆண்டுகளில் இன்னின்னதை நான் செய்து முடிப்பேன் என்றெல்லாம் சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம்.

அதே போல நீங்கள் சார்ந்துள்ள பிராந்திய சபைக்குக் கூட ஒரு திட்டமிருக்கவேண்டும். ஏதோ ஞாயிறு ஒரு நேரம் ஒரு ஆராதனை நடத்தினோமா, இந்த வாரத்துக்கெல்லாம் அதே போதும் என்று வந்தவர்களை வைத்து கூட்டத்தை முடித்து விடுகிறீர்களா? உங்களுடைய சபை ஒரு சிறந்த முன்னோடியையுடையதாக இருக்கிறதா? நீங்கள் ஆண் அங்கத்தினராக இருந்தால் முன்னோடிகளில் நீங்களும் ஒருவரா? நீங்கள் எல்லாரும் கூடி சபையைத் திட்டமிட்டு வழி நடத்திச் செல்லுகிறீர்களா? சபை விரிவாக்கம் பற்றி உங்களுக்கு ஒரு குறியீடு உண்டா? வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் வேத அறிவை அபிவிருத்தி செய்வதற்கு வேதாகம வகுப்புகள் நடத்தப் படுவது உண்டா? அவைகள் ஒரு ஒழுங்கைப்பின் பற்றி நடக்கிறதா?

அல்லது கிளி ஜோசிய பாணியில் ஊழியர் வேதாகமத்தைத் திறந்து; கண்ணுக்கு அகப்பட்ட வசனத்தை வாசித்து தமக்கு தெரிந்ததைச் சொல்லி முடித்து விடுகிறாரா? எல்லா உறுப்பினர்களையும் அவ-ரவருடைய தகுதிக்கேற்ப வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்-துடன் அவர்கள் ஒவ்வொருவரையும் பயன்படுத்துகிறீர்களா? வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி ஜெபிப்பதுண்டா? பின் வாங்கிப்போன உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி மீண்டும் அவர்-கள் சபையோடு இணைந்து வளரச்செய்யும் முயற்சி உண்டா? அவ்வப்போது சிறப்பு நற்செய்திக் கூட்டங்கள் நடத்தி பொதுமக்க ளுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பது உண்டா? அருகி லுள்ள பட்டணங்கள், கிராமங்களில் புதிய ஊழியம் தொடங்கும் முயற்சி உண்டா?

சகோதரிமார்களே! பெண்கள் மத்தியில் எப்படிப்பட்ட ஊழியம் செய்கிறீர்கள்? சபைக்கு ஒழுங்காக வராத பெண் அங்கத்-தினர்களைச் சந்திப்பதும், வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஜெபிப் பதும் உண்டா? ஞாயிறு பள்ளி நடத்த உதவி செய்வதுண்டா? சபையின் வேலைகளில், கர்த்தருடைய பந்தி ஆயத்தம் செய்வதில், சபை சுத்திகரிப்பது, இருக்கைகளை ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகளில் உங்கள் பங்கு என்ன? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு நேர்மையான பதில் சொல்லி நீங்கள் சபையில் எங்கு நிற்கிறீர்கள் என்று உய்த்து உணருங்கள்.

சகோதரனே! நீ சபைக் காரியங்கள் எதிலும் கலந்து கொள்ளா மல் மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று பட்டியல் போடு கிற பழக்கத்தை விட்டு விடு. ஆர்வமுள்ள ஒரு சில சகோதரர்கள் தங்களால் இயன்றதைச் செய்து வைத்திருந்தால் அதில் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டு அலையாதே. நீ முதலில் நன்முறையில் செயல்பட்டு மற்றவர்களுக்கு வழி காட்டு. அதுவே ஆரோக்கியமான அணுகுமுறை.

சகோதரனே சகோதரியே! நீ வேதாகம வகுப்புகளிலும், ஆராதனைகளிலும் இதர சபை நிகழ்ச்சிகளிலும், ஒழுங்காக ஆர்வத் தோடு கலந்து கொள்ளுகிறாயா? எப்பொழுதும் பிந்தி வருவது உன்னுடைய பழக்கமா? ஒருசிறு சாக்குக்கிடைத்தால் கூட போதும். அதை வைத்துக் கொண்டு ஆராதனைக்கு வராமல் நின்று போகி-றாயா? உன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை உன் குடும்பத்துக்கும் குழந்தைகளுக்கும் முன் மாதிரியாக இருக்கிறதா? உன்னுடைய தவறான கிறிஸ்தவ வாழ்க்கை உன் குடும்பத்தையே கடவுளிட-மிருந்து பிரித்து விடுகிற அபாயத்தை நீ உணருகிறாயா?

உன் அயலகத்தாரையாவது, உன் நண்பர்களையாவது ஆராதனைக்கு அழைத்துக் கொண்டு வருகிறாயா? உன் கிறிஸ்தவ

சகோதரனையாவது குடும்பத்தையாவது அல்லது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளக் கூடும் என்று தெரிகிற வேறே யாரையாவது அழைத்து அவர்களை உபசரித்து கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்துகிறாயா? அவ்விதமாக கிறிஸ்தவ அன்பை வெளிக்காட்டி சத்தியத்தை அறிவிப்பது ஒரு சிறந்த முறை: முயன்று பாருங்கள்.

நீங்கள் சபைக்காரியங்களில் அக்கரையுள்ளவரா? அல்லது எல்லா வேலைகளும் முடிந்த பிறகு விருந்தினர் போல் வருகிற நபரா? கர்த்தருடைய காரியங்களில் உனக்கு உள்ள ஈடுபாட்டை வைத்துத் தான் உன் தொழிலும், உத்தியோகமும், படிப்பும், குடும்ப அமைப்பும் இருக்கும் என்கிற உண்மை உனக்குத் தெரியுமா? சபை என்பது ஒரு இயந்திரம் போன்றது. அதில் உள்ள எல்லா உறுப்புகளும் சரியாக இயங்கினால் தான் இயந்திரம் ஓடும். அதில் ஒரு சிறு உறுப்புப் பழுதடைந்து விட்டால் கூட மற்ற பாகங்கள் இயங்கமுடியாமற் போய் விடும் 1 கொரி 12-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பவுல் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை நம்முடைய ஜென்ம சரீரத்தோடு ஒப்பிடுகிறார். சரீரத்தின் ஒரு உறுப்பு செயலற்றுப்போனால் முழுச் சரீரமும் அதனால் பாதிக்கப்படுகிறதை நாம் அறிவோம். அப்படியே ஆவிக்குரிய சரீரமாகிய சபையும் உறுப்பினர்கள் இணக்கமாகச் செயல்படாமலும், மெத்தனமாகவும், பகையுணர்வோடும், ஐக்கியமில்லாமலும் செயல்பட்டால் பாதிப்படையும்.

நாம் சபையின் தனித்தனியான உறுப்புகளாயிருந்தாலும் நாம் இணைந்து பாடுபடுவோமானால் சக்தி மிகுந்த இயந்திரத்தைப்போல் இருப்போம். உலகத்துக்கு ஒளியாகவும், பூமிக்கு உப்பாகவும் வெற்றி வாகை சூடும் பலமான சேனையைப் போலவும் இருப்போம். நாம் நம்மைசுற்றியுள்ள மக்களுக்குப் பயன்தரக்கூடிய அளவில் முன் மாதிரியாக இருக்க முடியும். நாம் சபையாகப் பெரிய காரியங்களைச் செய்து காட்டமுடியும், நம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பின் அளவை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் நாம் செய்திருப்பது எவ்வளவு சொற்பம் என்பதை உணர முடியும்.

அப்போஸ்தலர்களுடைய நடபடிகளில் சொல்லப்பட்டுள்ள சபை வரலாற்று நிகழ்ச்சியைக் கவனித்தால் அவர்கள் எவ்வாறு நாளுக்கு நாள் பெருகி வளர்ந்தனர் என்பதை அறிய முடியும். அது எப்படி சாத்தியமாயிற்று? நாள் தோறும் இடைவிடாமல் சத்தியம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டு வந்ததினால் தான். அவர்களுக்கு ஏராளமான துன்பங்களும் தடைகளும் ஏற்பட்டன. ஆனால் அவைகளால் அவர்கள் சோர்ந்து போகவில்லை. மாறாக அவைகளே அவர்களுக்குச் சாதகமாயின. தாங்கள் சிதறடிக்கப்பட்டுச் சென்ற விடங்களில் எல்லாம் இயேசுவின் நற்செய்தியை மகிழ்ச்சியோடே அறிவித்தனர். அப் 8:4,

சமீபத்தில் சிங்கப்பூரில் உள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு குறிப்பிட்ட சபையார் தங்கள் ஆராதனைக்கூடத்தை விரிவுபடுத்தி அதில் வேதாகம வகுப்புகளை நடத்த உத்தேசித்திருப்பதாகவும், புறவினத்தவருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியை தீவிரப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். தங்களுக்கு அருகாமையில் இருந்த சபைக்கு ஒரு கட்டடம் எழுப்பப்பட்டதால் கொஞ்சம் கடனாளிகளாகி விட்ட அவர்களுக்குக் கொஞ்சம் நிதிஉதவி செய்யப்போவதாகக் கூட குறிப்பிட்டிருந்தார். அது மட்டும் அல்லாமல் அந்த சபை வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் ஊழியம் செய்யும் சில ஊழியர்களுக்கு நிதி உதவி செய்வதாகவும் கூடக் குறிப்பிட்டிருந்தார். மேலும் நகரின் அருகாமையிலுள்ள கிராமத்துக்குச் சென்று அங்கே நற்செய்தியை அறிவித்து, பின்னர் ஒரு சபையை நிறுவ முயல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சபை இப்பொழுது மட்டுல் அல்ல; கடந்த சில ஆண்டுகளாகவே அப்படிச் செய்து வருகிறதை நான் அறிவேன். இன்னும் சில சபைகள் இருக்கின்றன. நாங்கள் முன்னேறுவதும் இல்லை. பின்னடைவதும் இல்லை. நாங்கள் வளருவதுமில்லை; தேய்வதும் இல்லை நாங்கள் புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பதுவும் இல்லை. இருக்கிற அங்கத்தினர்களை விரட்டுவதுமில்லை என்ற நிலையில் அனலும் இன்றிக் குளிருமின்றி இருக்கின்றன. இவ்விதமான தேக்க நிலை ஆரோக்கியத்துக்கு அறிகுறி அல்ல.

இந்த அவல நிலை மாற நாம் என்ன செய்யவேண்டும்? எங்கிருந்து தொடங்கவேண்டும்? முதலில் நம்மில், நம்முடைய குடும்பத்தில் ஆரம்பிக்கவேண்டும். பின்னர் நாம் சார்ந்துள்ள சபை வளரப் பாடுபட வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முயல வேண்டும். நம்முடைய நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் அழிவுப் பாதையில் வேகமாய் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அணுகி, இயேசுவின் அன்பின் நற்செய்தியைக் கூறவேண்டும். நாம் கனி கொடுக்கிற கிறிஸ்தவர்களாக மாற வேண்டும். விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். உங்களையும், உங்கள் உடைமைகளையும் உற்சாகமாக கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும். அப்பொழுது ஏற்படும் பலன்கள் நமக்கே பிரமிப்பை உண்டாக்கும்.

இப்பொழுது சொல்லுங்கள்! மேற்சொன்ன காரியங்களில் நம்முடைய ஈடுபாடு எத்தகையது? இதெல்லாம் செய்யாமல் நான் நல்ல கிறிஸ்தவன், நான் சார்ந்திருக்கும் சபை சிறந்த சபை என்று நாம் பெருமைப்பட்டுச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் கர்த்தர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார், நீங்கள் உண்மையாகவே கர்த்தருடைய பணியில் கிடைக்கும் ஆறுதலையும் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெறவேண்டுமானால் உங்களை நீங்களே அவருக்கு அர்ப்பணித்து, அவருடைய சேவையில் முழுமனதுடன் ஈடுபடுங்கள், நற்செய்தியைப் பிரகடனப்படுத்துங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள், அவருடைய இராஜ்ஜியத்தின் எல்லையை விரிவாக்குங்கள். அதுவே கர்த்தர் விரும்பும் நற்செயல்கள்.

**J. C. சோட்**

# கிறிஸ்தவப் பிள்ளை வளர்ப்பு

சுமார் மூன்று வயது தான் இருக்கும். அழகான பெண் குழந்தை. ஆனால் மகா பிடிவாதக்காரி. அவள் விரும்பிய ஏதோ ஒன்றைக் கொடுக்க அதன் பெற்றோர் மறுத்ததால் ஓ வென்று அலறி ஊரைக் கூட்டிக் கொண்டிருந்தாள். வழியில் போன ஒரு அம்மா, ஏய் ஏன் இப்படி அடம் பிடித்துத் தொலைக்கிறாய்? என்று கேட்டது தான் தாமதம். குழந்தைக்கே உரிய துடுக்குத் தனத்தோடு அப்பதான் நான் கேட்டதைக் கொடுப்பார்கள் என்று வெடுக்கென்று பதில் வந்தது. கேட்ட அம்மாள் பேசாமல் விழி பிதுங்க பார்த்துக் கொண்டே நின்றாள்

நாம் நினைக்கிறபடி குழந்தைகள் ஒன்றும் விபரம் தெரியா தவைகள் அல்ல. தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள பெற் றோர்களைக் காட்டிலும் அவைகள் ரொம்பவே தெரிந்து வைத் திருக்கின்றன. கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி ராவடி பண்ணினால் தான் பெற்றோர்கள் தங்கள் பிடிவாதத்துக்கும், அடத்துக்கும் பணிந்து வருவர் என்பது அவர்கள் கணக்கு. இந்த விசயத்தில் குழந்தைகளுக்கு வெற்றி தான். ஆனால் இப்படி நல்லது கெட்டது தெரியாத குழந்தைகளின் விருப்பத்துக்கு பணிந்து போவதுஎவ்வளவு ஆபத்தானது என்பதை பெரியவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை பெற்றோர்கள் ''நான் அவர்களது விருப்பத்தின் படி நடந்து தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தொந்தரவு தாங்க முடியாது''. என்று சொல்லலாம் ஆனால் அது உண்மையா? இல்லை, பிரச்சனையை ஞானத்தோடு அணுகினால் பிள்ளைகளை ஒரு வழிக்குக் கொண்டு வரமுடியும். நான்கு பிள்ளைகளுக்கு தாய் என்ற அனுபவத்திலும் என் தாயாரிடம் கற்றுக் கொண்டதையும் உங்களுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முதலாவதாக **பெற்றோர்கள் தாங்கள் பொறுப்புள்ள வர்கள் என்றும் குழந்தைகள் தன் சொல்லுக்கு கீழ்ப் படிய வேண்டியவர்கள் என்றும் உணர வேண்டும்**. இந்த தீர்மானத்தில் உறுதியாக இருந்து விட்டால் பிரச்சனையின் பெரும் பகுதி தீர்ந்த மாதிரி தான். அதற்குப் பிறகு குழந்தைகளின் சுபா வத்துக்கு ஏற்றவாறு அவரவர்களை எப்படி சாமாளிப்பது என்பதை சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் எல்லாக்குழந்தை களும் ஒன்று போல் இராது. ஒவ்வொன்றும் ஒரு கம்ப்யூட்டர்.

இரண்டாவதாக, குழந்தையின் தன்மைக் கேற்றபடி மனோதத்துவ முறைகளைக் கையாளவேண்டும். ஏன் என்பதற்கான காரணத்தைச்

சொல்லி கொஞ்சம் கடிந்து பேசினாலே சில குழந்தைகளுக்குப் போதும். வேறு சில குழந்தைகள் அவைகள்விரும்புகிற விளையாட்டுச் சாமான்களையோ,பொம்மைகளையோ பிடுங்கிக்கொண்டு ஒழுங்காக சத்தம் இல்லாமல் இருந்தால் தான் கிடைக்கும் என்று மிரட்டினால் பணிந்து விடும். வேறு சிலர் அவர்கள் விரும்புகிற வேற ஏதேனும் பொழுது போக்கு அம்சங்களை பறிமுதல் செய்தால் வழிக்கு வருவார்கள்.

ஒரு குழந்தை அடம்பிடித்துக் கத்துவதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை பெற்றோர்கள் மற்றெல்லாவற்றையும் விட்டு விட்டுத் தன்னைக் கவனிக்க வேண்டும் என்று இந்த முறையைக் கையாளலாம். என்னுடைய குழந்தைகளிடமிருந்து நான் ஒன்றைக் கற்றுக் கொண்டேன். அப்படிக் கத்தி அடம்பிடிகிற குழந்தையைக் கொண்டு போய் ஒரு தனி அறையில் விட்டு விட்டால் அது கத்துவதை விரைவில் நிறுத்திக் கொள்ளும். ''யாருடா அவன் அழுகிறவன்? போ, போய் குளியல் அறைக்குளே உட்கார்ந்து கொண்டு அழு. அல்லது உன் படுக்கையறைக்குச் சென்று கத்து அல்லது அந்த மூலையில் நின்று சுவர்ப்புறமாகத் திரும்பிக்-கொண்டு அழுது தொலை. மறுபடியும் நீ சிரித்த முகத்தோடு வருகிறவரை என்கிட்ட வரக்கூடாது''. என்று கண்டிப்பானகுரலில் சொல்லி விடுவேன். பாருங்களேன்! கொஞ்ச நேரத்தில் கண்ணீர் மாயமாய் மறைந்து போகும். கதறல் நின்று விடும். குழந்தைக்குக் கூட ஒருவரும் நம்முடைய கதறலை இரசிக்கவில்லை என்று தெரிந்தால் அது வீண் முயற்சி என்று கைவிட்டு விடுகிறது.

இவ்விதமாக பெற்றோர்களிடத்தில் நம்முடைய பிடிவாதம் செல்லாது என்று தெரிந்து விட்டால் அநேகமாக சேட்டைகள் தானாகக் குறைந்து போகும். ஆனாலும் சில வேளைகளில் கண்-டிப்பும் சிறு தண்டனைகளும் தேவைப்படலாம். பெற்றோர்கள், குழந்தையின் நலனைக் கருதி அதைச் செய்யத் தயங்கக் கூடாது.

சில வேளைகளில் பிள்ளைகள் முறண்டு பிடித்துக் கொண்டு கீழ்ப்படிய மறுக்கும் போது பெற்றோர்களும் ஆத்திரமடைந்து அவனை கண்டபடி கண்டதைக் கொண்டு வெறித்தனமாகத் தாக்கி விடுகிறார்கள். இது விசனிக்கத் தக்க காரியம். அப்படி செய்வோமானால் அந்த முரண்டு பிடிக்கிற குழந்தையை விட நாம் எந்த வகையில் மேம்பட்டவர்கள்? அது குழந்தை நல்லொ-ழுக்கத்தில் வளரக் கொஞ்சமும் உதவாது.

தேவைப்பட்டால் குழந்தைகளை அடித்து மிரட்ட வேண்டி வரலாம். அப்படிச் செய்யும் போது நிதானம் இழக்காமல் அன்-போடும் அக்கறையோடும் தான் செய்ய வேண்டும். குழந்தையைப்

அடிப்பதற்கு நான் உபயோகப்படுத்தும் ஒரு பொருளைக் கொண்டு என்னையே அடித்துப் பார்த்துக் கொள்வேன். அப்பொழுது அதை எப்படி உபயோகித்தால் குழந்தைக்கு உடலில் காயங்களோ மற்ற தொந்தரவுகளோ ஏற்படாது என்று தெரிந்து விடும். என்னுடைய தாயார் நான் சிறுபிள்ளையாக இருந்த பொழுது உபயோகித்த-தும் நான் தாயான பிறகு எனக்குத் கொடுத்த ஆலோசனையின் படியும், நல்ல மிலாறுகள் அதாவது ஊஞ்ச மரக்குச்சி அல்லது அசோக மரக்குச்சி ஏற்ற கருவியாக இருக்கும். அவைகளைக் கொண்டு அடித்தால் சுளீர் என்று வலி ஏற்படும். அது குழந்தைக்கு நல்ல சிகிச்சை. ஆனால் வேறே தொந்தரவு ஏற்படாது. இருந்த போதிலும் ஆத்திரத்தினால் ஓங்கி அடித்து விடாதபடி முதலில் நம்மை நாமே அடித்துப் பார்த்து நிதானமாய் குழந்தையின் மேல் பிரயோகிக்க வேண்டும்.

எல்லா பெற்றோர்களுக்குமே தங்கள் குழந்தைகளைச் சிறந்த பிரஜைகளாக வளர்க்கும் பொறுப்பு உண்டு. கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கு இது மிகவும் அதிகம். ஏனெனில் வேத புத்த-கத்தில் குழந்தைகளை வளர்ப்பது பற்றி பல ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

**பெட்டிபர்ட்டன் சோட்**

## தாவீதின் ஜெபம்

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

தேவரீர் எங்களைச் சிறுமைப்பபடுத்தின நாட்-களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்-கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக,

எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்க-ளிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிபடுத்தியருளும்.

சங் 90 : 14 - 17.

# நவீன போதகர்

இக்காலத்திய போதகர் ஒரு விசித்திரப் பிறவி! உறுதியானவர், தைரியசாலி என மக்களின் பாராட்டைப் பெற அவர் விரும்புகிறார். ஆனால், உண்மையைச் சொன்னால், நீதி நெறி, சமய சார்பு சம்பந்தமான காரியங்களில் அவர் ஒரு படு கோழை. தேவன் பேரிலும், மக்களிடத்திலும் அவர் கொண்டுள்ள அளவற்ற அன்பு பற்றி எல்லோரிடமும் பீற்றிக் கொள்ளத் தவறுவதில்லை, ஆனால் அவர் செயல்பாடுகளோ அவரை ஒரு கள்ளப் போதகர் என தோலுரித்துக் காட்டுகிறது. (கலா. 1:6-10).

இந்த நவீன போதகர், தன் செவிகளைத் தாழ்த்தி, கூர்மையாக்கி மக்கள் எதைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, மக்கள் கூட்டம் மகிழ்ச்சி அடையும் விதத்தில் போதிக்கிறார்கள். வேதாகமத்தை நீட்டியோ, சுருக்கியோ, மாற்றியோ எப்படி வேண்டுமானாலும் செப்பிடு வித்தை செய்து போதிக்கும் கலையில் வல்லவர் இவர்! பலதரப்பட்ட போதகர்கள், மாறுபாடான சபைப்பிரிவுகளிலே, மாறுபட்ட செய்திகளை அளித்து வருகிறார்களே அதற்கு காரணம் இது தான். (எரேமியா 5:30-31; 23;26.32).

புதிய ஏற்பாட்டின் தொடக்க காலத்திலே எல்லா நற்செய்தி போதகர்களும் ஒரே காரியத்தைப் போதித்தார்கள். பேதுரு ஒரு சுவிசேஷத்தையும், பவுல் வேறொரு சுவிசேஷத்தையும் போதிக்க வில்லை. ''உங்களைக் கிறிஸ்துவின் கிருபையால் அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதை பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களை கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறெரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டனாயிருக்கக் கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்கிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்.'' (காலத்தியர். 1:6-9).

சுவிசேஷம் ஒன்றாகவே இருந்தபோதிலும், நாமகரணக் கூட்டங்கள் மாறுபாடான பலவற்றைப் போதிக்கிறார்கள். புதிய

ஏற்பாட்டின் போதகர்கள் எல்லோருமே பரிசுத்தமும் எளிமையுமான ஒரே சத்தியத்தைப் போதித்தார்கள். அவர்களுடைய போதனைகள், நிரந்தரமான வித்தியாசப்பட்ட சபைப் பிரிவுகளைத் தோற்றுவிப்பதில் போய் முடியவில்லை. ஒரே சபையாக செயல் செயல்பட்டு வந்தனர்.

(1 பேதுரு 4:11; வெளி 22:18–19).

தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆகி விடுவானா? வேதாகமத்தை கையில் வைத்துக் கொண்டு, போதகர்கள் என வெளியில் கிளம்பி விடும் எல்லா போதகர்களையும் நம்ப வேண்டுமென வேதாகமம் கூறவில்லை. (1 யோவான் 4 : 1) அவர்கள் போதிப்பது தேவனுடைய வார்த்தையைத் தானா என ஒவ்வொரு நாணயமான மனிதனும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். (அப். 17:11). அப்போலோ "சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான மனிதனாக" விளங்கிய போதிலும் முழு சத்தியத்தை அவன் அறிந்திருக்கவில்லை. (அப். 18:24–28). நல்ல வேளையாக, அவனுடைய தவறை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் புரிந்து கொண்டு, **"தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்"** எனவே, இக்காலத்திலே ஆயிரக்கணக்கான போதகர்கள் தேவனுடைய சத்தியத்தை கற்றுத் தெளிவு பெற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நிறைய படித்து, பட்டங்கள் பெற்று, மிகவும் செல்வாக்கான போதகராக் ஒருவர் இருப்பதால் மட்டுமே, அவர் சுவிசேஷத்தின் சத்தியங்கள் யாவற்றையும் அறிந்தவர் என எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை. அல்லது, இன்று நிறையபேர் நாமகரணக் கூட்டத்தைச் சார்ந்த போதகர்களாக இருப்பதும், மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குடன் அவர்கள் வலம் வருவதும், எல்லாம் வல்ல தேவனுடைய பார்வையில் அவர்களைச் சத்தியவந்தர்களாக்கி விடாது. II நாளாகமம் 18:4–34 வசனங்கள் சித்தரிக்கும் காரியத்தைக் கவனியுங்கள் : தேவனுக்கு முன்பாக 400 தீர்க்கத்தரிசிகள் தவறானவர்களாகவும், **ஒரே ஒருவர்** மட்டுமே சரியான தீர்க்கத்தரிசியாகவும் காணப்பட்டார். போதகர்களை நாம் அடையாளம் கண்டு கொள்ள ஒரே பாதுகாப்பான வழி, அவர்கள் **சத்தியத்தைப் போதிக்கிறார்களா** அல்லது (ஏ) மாற்றுகிறார்களா என அறிவதே (2தீமோ. 4:2; அப்.17:11; 1 பேதுரு 4:11). வசனத்தைப் போதிக்காத எவரும் சத்தியத்தைப் போதிக்க இயலாது.

**"எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொண்டு ஏமாந்து போகத்தயார்!"**

என்ற வாசகம் நமது நெற்றியில் கொட்டை எழுத்துக்களில் ஒட்டி-

யிருப்பதை தன்துஅலைபாயும் கண்களால் நோட்டம் விட்டுத் தெரிந்து கொள்ளும் நவீன போதகர், நம்மை அணுகும் முறை எப்படித் தெரியுமா?

பவ்யமாக நம்மிடம் அவர் வருகிறார். தேவன் இவரைத் தேடி வந்த விதம் பற்றி ஒரு கதை விடுகிறார். அடுத்து, தனது சத்திய வசனங்களிலே காணப்படாத ஒரு புதுச்செய்தியை, தேவன் இவருக்கென்றே கொண்டு வந்து இவருடைய இருதயத்திலே பதிய வைத்துச் சென்ற கதையை 'பய பக்தியுடன்' வர்ணிக்கிறார்; தொடர்ந்து, மனித இரட்சிப்புக்காக தேவன் இவரிடம் அவ்வப் போது வெளிப்படுத்திக் கொண்டு வரும் புதுப்புதுச் செய்திகளைப் பற்றி விலாவாரியாக அலசுகிறார். இவை யாவற்றையும் கேட்டுக் கொண்டு, மெய் சிலிர்த்துப் போய், வாய்க்குள் சென்று வெளிவரும் ஈ பற்றிய உணர்வு எதுவுமின்றி, பித்து பிடித்ததுபோல நாம் விழி பிதுங்க அமர்ந்திருப்பது, நமது நவீன போதகருக்கு மேலும் போதை ஏற்றிவிட, உற்சாகமாக கதையைத் தொடருகிறார். ''வேதாகமம் மட்டும் பத்தாதுங்க; அதனால தான் ஆவியானவர் அடிக்கடி வந்து புதுப்புது சங்கதிகளை என் இருதயத்திலே பதிய வைச்சுட்டுப் போறாரு. வேதாகமத்தை ஊறுகாய் மாதிரி வைச்சுக்க வேண்டியதுதான். மத்த காரியத்தை எல்லாம் ஆவியானவர் அவ்வப்போது சொல்ற மாதிரி செய்ய வேண்டியது தான். இதெல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்றது தான் என்னுடைய வேலை'', என்பதாகக் கூறி, தனது கள்ளப் போதகத்தை ஒரு அப்பாவி ஆத்துமாவுக்குள் அடைத்து விட்ட திருப்தியுடன், மறக்காமல் நமது சட்டைப் பையைத் தடவி அங்குள்ள சில்லறை முழுவதை யும் அள்ளிக் கொண்டு, அடுத்த ஆத்துமாவை கரை சேர்க்கப் புறப்பட்டுப் போகிறார் நமது நவீன போதகர்!

இப்படிப்பட்ட போதகர்களில் பலர் வேதாகமத்தை, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை, முற்றிலுமாக ஒருபோதும் படித்திருக்கப் போவதில்லை. வேதாகமப் புத்தகம் கூட அவர்களிடம் இருப்பதில்லை. அவர்களுடைய போதனைக்கு அது தேவையும்அல்லவே! அமெரிக்கநாட்டு ஹார்வேட் வேதகாமக் கல்லூரியில் பட்டம் பெறப்போகும் ஒரு மாணவன் தனது சகமாணவனிடம் கூறினான் ''ஐயையோ தேர்வுக்கு வேதாகமத்திலிருந்து கேள்விகள் கேட்பார்கள் போல் தெரிகிறதே.. நான் அவசரமாய் போய் ஒரு பைபிள் வாங்கி வருகிறேன் சொந்தமாக இதுவரை என்னிடம் பைபிளும் இல்லை''. சொந்தமாக ஒரு வேதாகமப் புத்தகம் இன்றி, வேதாகமக் கல்லூரியில் பட்டமும் பெற்று போதகராகப் போகிறான் ஒரு மாணவன்! அவன் எதைப் போதிக்கப் போகிறான்?

இவர்கள் குருடர்களின் குருட்டுத்தலைவர்களாயிருக்கின்றனர் (மத் 15: 13-14). இவர்கள் வேதகாமத்தைப் பற்றிய ஞானம்

எதுவுமில்லாதவர்கள். தத்துவம் இவர்களுக்கு தண்ணீர் பட்டபாடு; மனோ தத்துவத்திலே மன்னர்கள்; இவர்களின் சரித்திர அறிவோ சமுத்திர ஆழத்தையும் மிஞ்சும்; விஞ்ஞானத்திலே பெரிய புலிகள் வேதகாமப்படிப்பிலோ இந்த நவீன போதகர்கள் வெறும் எல்.கே.ஜி தான்!

சத்திய வசனங்களையே நம்பாத, மெத்தப்படித்த பல போதகர்கள் நாமகரணக் கூட்டங்களின் பெரிய ஆலயங்களிலே பிரசங்கங்கள் செய்து கொண்டு இருக்கின்றனர். தேவனையே நம்பாதவர்கள் எதைப் போதிக்கிறார்கள்?

இந்த நவீன போதகர்கள் கற்ற சமயக் கோட்பாடுகளுக்கு ஒத்து வரும் வசனங்களை மட்டும் வேதகாமத்திலிருந்து எடுத்துக் கொண்டு, மற்ற சத்திய வசனங்களை ஒதுக்கி விடுகின்றனர். உதாரணமாக: தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் (மாற்கு 16:16 அப் 2: 36-38) ; தேவனுடைய ஆராதனையின் திட்டம் (அப் 2:42 எபே;219; யோவான் 4;23-24); இயேசுவின் இறைத்தன்மை; கன்னியிடமிருந்து பிறந்தது; அவர் செய்த அற்புதங்கள்; அவருடைய மரணம்; உயிர்ப்பு.

இந்த (G)பாதகர்கள் பிரகடனப்படுத்தியுள்ள நவீன மதச் சடங்குகள் பல உண்டு. கிருபையால் மட்டுமே இரட்சிப்பு; விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு; ஜெபத்தினால் இரட்சிப்பு — (எபே 2:36-38; 22;16; ரோமர் 6;3-4; 1 பேதுரு 3:21).

இதே நவீன போதகர்கள் தான் கிறிஸ்துவின் சபை தேவையற்ற ஒன்று என்றும் (அப் 20:28; எபே 1:22-23 ; கெலோ 1:18, 23-24); இயேசு கட்டளையிட்ட திருமுழுக்கு மனித இரட்சிப்புக்கு தேவையற்றது என்றும் (மத் 28:18-20! மாற்கு 16:15-16; அப் 2:36-38, 41, 47); எல்லா சபைகளும் ஒன்றே; விரும்பும் சபையில் அங்கம் வகிக்கலாம் என்றும், இன்னும் எண்ணற்ற தவறான தங்கள் கண்டுபிடிப்புகளை போதித்து, மக்களை குழப்பிக் கொண்டு வருகிறார்கள்.

இந்த நவீனங்கள் போற்றி யாதுகாக்கும் எந்த போதனையையும் இயேசுவோ, அப்போஸ்தலர் பவுலோ, அல்லது பேதுருவோ அல்லது வேறு எந்த அப்போஸ்தலரோ ஒரு போதும் போதிக்கவில்லை என்பதை மிகவும் பணிவுடன் கூறிக்கொள்கிறோம்.

அன்பான வாசகரே! இந்த நவீன போதகர்கள் இப்போது போதித்து வரும் காரியங்கள் வேதாகாமத்தில் எங்கு இடம் பெற்றுள்ளன என்பது உங்களுக்குத் தெரிந்தால், அந்தந்த வசனங்களைக் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதுவீர்களா?

**W.A ஹோலி** **எஸ். எஸ்.ராஜன்**

# கிறிஸ்து சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?

கிறிஸ்துவை நேசிக்கிறோம் என்று வேஷம் கட்டி கோஷம் போடுகிறவர்களே, தலைப்பைப் பார்த்ததும், கிறிஸ்து சொன்னபடி நான் எப்போது செய்யாமற் போனேன்? என்ற ஒரு கேள்வி உங்கள்மனதில் எழலாம். நீங்கள் கிறிஸ்துவுக்காக என்ன செய்தீர்கள்? அல்லது அவருக்காக நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். ஒருவேளை நீங்கள் சொல்லலாம், ''நான் தினமும் வேதம் வாசிக்கிறேன், ஜெபிக்கிறேன். இசைக்கருவிகளை பயன்படுத்தி இனிமையாக பாடுகிறேன், கோவிலுக்கு செல்லு-கிறேன், எல்லாக் கூட்டங்களிலும் தவறாமல் பங்குகொள்கிறேன், அதிகமாக காணிக்கை கொடுக்கிறேன், இன்னும் என்ன செய்ய வேண்டும்?'' என ஆவேசத்தோடு கேள்விகளை எழுப்பலாம். ஆனால் இவை யாவும் வெறும் பழக்க தோஷமாகக் கூட இருக்-கலாமல்லவா? மெய்யான தேவனைப்பற்றி அறியாத மக்களும்கூட இப்படிப்பட்ட காரியங்களை தவறாமல் செய்துகொண்டிருக்கிறார்-களே! இவர்கள் கிறிஸ்துவுக்கு பிரியமானவர்கள் என்று கூறிவிட முடியுமா? உங்கள் செயல்களை நினைத்து திருப்திப்பட்டுக் கொள்-வீர்களானால், மத்தேயு 7ம் அதிகாரம் 21-23 வசனங்களில் கூறப்பட்டுள்ள மக்களைப் போல் ஏமாற்றம் அடைவீர்களென்பதில் சந்தேகமில்லை. மணவாளன் இயேசு வருமுன் நீங்கள் ஆயத்தப்-படும்படியாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கிருபையின் நாட்களை வீணாய் கழிக்காதபடி ஜக்கிரதையாய்இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் உங்கள் ஜீவன், கொஞ்சகாலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கி-றதே! (யாக்கோபு 4:14)

நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதபடிக்கு தேவ வசனங்களை கேட்பவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்-கிறவர்களாயும் இருங்கள் என்ற ஒரு சிறந்த அறிவுரையை நாம் வேதத்தில் காணலாம். (யாக் 1:22) கிறிஸ்துவின் வசனங்களே நம்மை கடைசிநாளில் நியாயந்தீர்க்கப் போகிறபடியால் அவற்றின் படி நாம் நடக்கவேண்டியது மிகவும் முக்கியமானதாகும் (யோவான் 12:48) கடைசிநாளில் நடைபெறப்போகும் சம்பவங்கள் அதிபயங்-கரமானவை அதில் நீங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமாயின் இன்றே கிறிஸ்துவின் உபதேசங்களின்படி செய்யுங்கள்.

கிறிஸ்து உங்களுக்கு என்ன கூறுகிறார் என அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா? இதோ அவரது இனிமையான வார்த்தைகள்;

''வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு (யோவான் 5:39, 40) ''என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக்கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?'' என்று நமது இரட்சகராகிய இயேசு ஏக்கத்தோடு கேட்கும் கேள்வி உங்கள் மனதைத் தொடவில்லையா? ''என் மகன் எப்பொழுது என் வசனத்தை அறிந்துகொள்வான்? என்னிடம் வர என் மகனுக்கு எப்பொழுதும் மனமுண்டாகும்?'' என்று ஒவ்வொரு நாளும் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார் நமது பரமபிதா. வரப்போகும் மகா தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையா? கிறிஸ்துவை விசுவாசித்து அவரது பாதையில் நடக்கும் ஒவ்வொருவரும் இந்த தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்வகையில், தேவன் தம்முடைய ஒரே குமாரனாகிய அவரை இவ்வுலகத்தாருக்காக கொடுத்தார். அவரது ஆழ்ந்த அன்பை இது வெளிக்காட்டுகிறது (யோவான் 3:16). இந்த அளவற்ற அன்பை இன்று புறக்கணிக்கும்படி உங்களுக்குள் ஏற்பட்ட சோர்வு என்ன? ''என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது'' என்று இயேசு கூறுகிறார். (மத் 11: 29,30) இப்படியிருக்க, அவருடைய உபதேசத்தைக் கற்றுக்கொண்டு அவர் வழியில் துணிந்துசெல்ல உங்களுக்கு மனமில்லாதிருப்பது ஏன்? உங்களுக்கு தடையாயிருப்பது எது? பரம்பரை வழக்கங்களா? கட்டுக்கதைகளா? இன்று அநேகர் தங்கள்பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கும், மனுஷருடைய கட்டுக்கதைகளுக்கும் செவிசாய்த்து. தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தங்களது உல்லாசமான வாழ்க்கைக்கு கிறிஸ்துவின் உபதேசம் தடையாய் இராதபடிக்கு அதைத் தள்ளிவைத்துவிட்டு, மணலின் மேல் தங்கள் வீட்டைக்கட்டி, பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்கள். மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரணவழிகள் என்று வேதம் கூறுகிறது. (நீதி 14:12) தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அநேக சடங்குகளை அனுசரித்து வந்த யூதமதத் தலைவர்களை இயேசு நேருக்குநேர் தாக்கிப்பேசினார். (மாற்கு 7:8,9).

கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்படிந்தால், என் தாய் சபையிலிருந்து என்னை நீக்கிவிடுவார்கள், என்னை யாரும் மதிக்-

கமாட்டார்கள், என்து குடும்பத்தில் நடைபெற வேண்டிய முக்கியமான நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்துவது யார்? நான் இறந்தால் எங்கே புதைப்பார்கள்? என் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுமே! என்றெல்லாம் பயந்துகொண்டு, தங்கள் காலத்தை வீணாக்கிக்கொண்டு நித்திய அழிவை நோக்கி கண்மூடித்தனமாக நடைபோட்டு கொண்டிருப்பவர்கள் ஏராளம்! ஏராளம்! நீங்களும் இந்தக் கூட்டத்தில் இருக்கிறீர்களா? அழிந்துபோகிற உங்கள் சரீரத்தை குறித்துக் கவலைப்படாமல், அழிவில்லாத உங்கள் ஆத்துமாவைக் குறித்துக் அக்கரை கொள்ளுங்கள். ''அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாக விரும்பினார்கள்'' என்ற வேதவசனத்திற்கேற்ப உங்கள் நிலை இருக்க வேண்டாம். (யோவான் 12:43) முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இந்த உலகப்பிரகாரமான தேவைகள் யாவற்றையும் தேவன் கவனித்துக்கொள்வார் (மத் 6:33)

கிறிஸ்து கூறும் தெளிவான உபதேசங்களின்படி நடக்காதவர்களுக்கு அவருடைய இராஜ்யத்தில் இடமில்லையென்பது நாமனைவரும் அறிந்த உண்மை. ஒருவன் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமாயின் அவன் மறுபடியும் பிறக்க வேண்டும், என்பது கிறிஸ்துவின் நிபந்தனை. ஒருவன் மறுபடியும் எப்படி பிறப்பான் என்ற சந்தேகம் உங்கள் மனதில் எழலாம். நிக்கொதேமு என்ற ஓர் அறிவாளிக்கும் இதே சந்தேகம் எழும்பினது. இதற்கு இயேசு விளக்கமளிக்கையில், ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று திட்டமாக பதிலளித்தார். (யோவான் 3:3-5). ''நான் ஜலத்தினால் பிறந்துவிட்டேன்', என்று சொல்லுகிறாயா? எப்படி பிறந்தாய்? 'குழந்தை பிறத்தல்' என்றால் அது தனது தாயின் வயிற்றினுள் மறைந்திருந்து வெளியே வரவேண்டும் இதைத்தான் ''பிறப்பு'' என்கிறோம் அதுபோலவே 'ஜலத்தினால் பிறத்தல்' என்றால் ஒருவன் ஜலத்தினுள் மறைந்திருந்து வெளியே வரவேண்டும். சிறிது தண்ணீரை ஒருவன் மீது தெளித்துவிடுதல்; அவன் தண்ணீருக்குள் மூழ்கி எழுவதற்கு நிகராகுமோவென்று சிந்தித்துப் பாருங்கள்.

''நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது'' என்று நமது இரட்சகர் கூறியிருக்கிறார் (யோவான் 6:63) ஆக, இந்த வசனங்களைக் கேட்டு அதன்மூலமாக பிறந்தவர்களே, ''ஆவியினால் பிறந்தவர்கள்'' ஆவார்கள். பேதுரு தனது நிருபத்தில் இதை மிகவும் விளக்கமாக தெளிவுபடுத்தியிருப்பதை கவனிக்கவும். ''அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்-

றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழி வில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறீர்-களே'' (1பேதுரு 1:23) யாக்கோபு குறிப்பிடுகையில், ''சத்திய-வசனத்தினாலே ஜெநிப்பித்தார்'' என்கிறார் (யாக் 1:18) தேவனு-டைய வசனத்தைக் கேட்டு அதற்கு ஒருவன் கீழ்ப்படிகின்ற போது, ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து, தேவனுடைய இராஜ்-யத்தில் பிரவேசிக்கிறான்.

இதை வாசிக்கும் எனதன்பு சிநேகிதனே! சகோதரியே! உன்னுடைய தீர்மானம் என்ன? தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மனமுண்டா? நீங்கள் எவ்வளவு தான் நல்லவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் கிறிஸ்துவின் சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படியாவிட்டால், நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்லவென்பதை தயவு செய்து மனதில் கொள்ளுங்கள். ''கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன்'' என்று யோவான் குறிப்பிடுகிறார். 1 யோவான் 9). கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படிய விரும்பிய ஆயிரக்கணக்கான மக்கள் அன்று, ''சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று கதறினர். இந்தக் கேள்வி உனது உள்-ளத்திலும் எழும்பட்டும்! அதற்கு பேதுரு பதிலளிக்கையில் ''நீங்-கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்-கள். அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று தெளிவாக கூறினார். விசுவாசிக்க திராணியற்ற, மனந்-திரும்ப அவசியமற்ற குழந்தைகளைப் பார்த்து பேதுரு இவ்வாறு கூறவில்லையென்பதைக் கவனிக்கவும். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, மனதில் குத்துண்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட விடை இது (அப் 2:37 38)- இன்றைய நாட்களில் இந்த உபதேசத்திற்கு மாறாக, குழந்தைகளுக்கும் தண்ணீரைத் தெளித்து, அதை ஞானஸ்நானம் என்று கூறுவதை நாம் காண்கிறோமல்லவா? இப்படிப் பட்ட உபதேசங்கள் கிறிஸ்துவின் உபதேசங்கள் கிடையாது. இவை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட போலி போதனைகளாகும்.

உனது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வேறு வழியே கிடையாது. ''கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, ஜலத்-தினாலும் ஆவியினாலும் பிறக்கும் போது மட்டுமே இரட்சிப்பை-யும், பாவமன்னிப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தமது சபையிலே சேர்த்துக் கொள்ளுகிறார்.'' (அப் 2:47). மனிதனால்

ஏற்படுத்தப்பட்ட சபைகளில் நாமாகவே சென்று சேர்ந்துகொள்ள் முடியும். ஆனால், கிறிஸ்துவின் சபையில் ஒருவனை சேர்க்கும் உரிமை கிறிஸ்துவுக்கு மாத்திரமே உண்டு ஏனெனில், சபை அவருக்கே சொந்தமானது, இதற்கு தலைவரும் அவரே. நீங்கள் மனிதனின் போதனைகளால் ஏமாற்றப்பட்டவர்களாக ஜீவிக்கப்போகிறீர்களா? அல்லது கிறிஸ்துவின் உபதேசங்களை ஆராய்ந்து அறிந்து அவர் சொல்லுகிறபடி செய்யப்போகிறீர்களா? அவர் இன்றும் உங்களைநோக்கி கேட்டும் கேள்வி, ''என்னை ஆண்டவரே, ஆண்டவரே! என்று சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? (லூக்கா 6:46). ஆண்டவருக்கு உங்களது பதில் என்ன? சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

**S. ஹென்றி மோகன்**

## எரேமியாவின் ஜெபம்

கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

கர்த்தாவே என்னைத் தண்டியும், ஆனாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினால் அல்ல, மட்டாயத் தண்டியும். எரே 10:23,24

## சேனைகளின் கர்த்தரின் எச்சரிப்பு

உன் தீமை உன்னைத் தண்டிக்கும், உன் மாறுபாடுகள் உன்னைக் கண்டிக்கும் நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும் என்னைப் பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும் எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்து கொள்.

எரே 2:19

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

**வாசக அன்பர்களே!**

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் முடிந்தால் திருப்பி அனுப்புங்கள். அல்லது வேறு ஒரு நண்பருக்குக் கொடுத்து மேலும் தொடர்ந்து பெறுவதற்கு ஒரு கார்டு எழுதச் சொல்லுங்கள் உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

**ஆசிரியர்**

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
PostBoxNo: 58 ERODE-638 001.